
வம்பன்

படங்கள் டோனி ஜெப்

தமிழில் கிருஷ்ணன்



வம்பன்

படங்கள் டோனி ஜெப்

தமிழில் கிருஷ்ணன்



வம்பன் எப்படி இருப்பான்

எல்லோரையும் கேலி
செய்வான்.
எல்லோரையும்
மிரட்டுவதில்
மகிழ்ச்சி
அடைவான்.



எல்லோரையும் கேலியாக
பெயர் சொல்லி கூப்பிடுவான்.



குண்டு, சப்பாணி, கருப்பா ... இப்படி
இழிவாக யாரை வேண்டும் என்றாலும் அழைப்பான் .

ஒருவர் பேசுவது போலவே நக்கலாக திரும்ப பேசுவான்...



அடுத்தவர்களை கொடுமை படுத்துவான்.



அடிப்பான் ...



தன்னோடு பலவீனமானவர்களை
அழ-வைப்பதே இந்த வம்பர்களின் வேலை.



அடுத்தவர்களின் பொருட்களை பிடுங்குவது



விளையாட்டு பொருட்களை தன்னது
போல் எடுத்து கொள்வது



தான் பயப்படும் விஷயங்களை

அடுத்தவரை வைத்து

செய்வது.



அடுத்தவர்கள் பயப்படும்

விஷயங்களை செய்ய வைப்பது .


அருவறுப்படைய வைக்கும் காரியங்களை
அடுத்தவரை செய்ய வைப்பது.



அடுத்தவர்களை சிறுமை படுத்துவது.



தவறான செயல்களை
செய்ய வைப்பது.



ஒருவரை ஏவி இன்னொருவரை
துன்புறுத்துவது .



ஜாக்கிரதை !



ஜாக்கிரதை !
இந்த வம்பர்களின்
இலக்கு சிறியவர்களும் ,
பலவீனமானவர்களும்.

ஊருக்கு புதிதாய்
வந்திருக்கும் குழந்தைகள்,
நண்பர்கள் இல்லாத
குழந்தைகள் .



கொஞ்சம் வித்தியாசமாக
பேசினாலோ, நடந்தாலோ இவர்களுக்கு
இன்னும் வசதி. வம்பு இழுப்பதற்கு !

வம்பர்கள் தான் வம்பு செய்பவர்களிடம் எதிர்பார்ப்பது

அவர்கள் பலவீனமானவர்களாய் இருக்க வேண்டும்.
யாரையும் உதவிக்கு அழைக்க முடியாதவர்களாய் இருக்க வேண்டும்.



யாரிடமும் போய் குறை சொல்ல முடியாதவர்களாய் இருக்க வேண்டும்.



அப்படி கூறினால் விளைவுகள் மோசமாக இருக்கும் என்று கூறி பயமுருத்துவது .

சில நேரங்களில் தன்னோடு பெரியவர்களாய் இருப்பவர்களேயே கலாய்ப்பது.
ஆசிரியரர்களை வகுப்பறையில் பாடம் எடுக்க விடமால் கலாட்டா செய்வது .




மற்றவர்களையும் சேர்த்து கொண்டு

ஆசிரியரர்களை பொது எதிரியாக

சித்தரிப்பது.

அழிச்சாட்டத்திற்கு தலைவனாக இருப்பது எப்படி?

தந்திரமாக இருந்தால் போதும் .
உன் வேலையை அடுத்தவரை செய்ய வைப்பது !
உன்னோடு சிறியவர்களையும், சில மக்குகளையும்,
ஆ! என்று நீ செய்வதை பாத்து
கொண்டிருப்பவர்களையும் சேர்த்து கொள்வது.





அதற்கு பிறகு அந்த குழுவுக்கு நீ தான் தலைவன் !

எல்லோரையும் உன் கட்டுக்குள் வைத்து கொள்ள வேண்டும். அவர்களையும் சில நேரங்களில தட்டி கொடுக்க வேண்டும். அப்போது தான் உன்னை யாராவது குறை சொல்லும் போது உனக்கு வக்காலத்து வாங்க அவர்கள் வருவார்கள் .

உன்னை போலவே நடப்பார்கள்,

உடையணிந்து கொள்வார்கள்.






மக்குகள் உன்னை சுற்றி வந்தால் தானே உன்னை ஆஹா...

ஓஹோ ... என்று புகழ்வார்கள்.

நீ மாட்டி கொண்டால் ?

வம்பர்கள் மாட்டிக்கொண்டால்
“யாரை வேணும்னாலும் கேட்டு பாருங்க, அவன்
தான் ஆரம்பித்தான்” என்று
மற்றவர்கள் மீது பழி போடுவான்.
வம்பர்களை பொறுத்த வரை எல்லாமே ஏமாத்து
வேலை தான் !



தன்னை காப்பாத்தி கொள்வதற்கு
அழுது காரியத்தை சாதித்து
கொள்வார்கள் வம்பர்கள் .
ஐயோ நான் நினைக்கவே இல்லை
இது போல செய்யவே மாட்டேன் .




"வம்பர்கள்" ஒருவிதத்தில் மடையர்களே !

ஒரு "வம்பனாய்" இருப்பதில் உண்மையாகவே
மகிழ்ச்சி ஒன்றும் இல்லை.



யாருக்கும் அவர்களை பிடிக்காது...
அவர்கள் நண்பர்களுக்கும் தான்.
பயத்தினாலேயே அவர்களை மதிப்பார்களே
தவிர அன்பினால் இல்லை.

வம்பனின் திருட்டுத்தனத்தை யாரவது
கண்டு பிடித்து விட்டால் அவனுக்காக
யாரும் உதவி செய்ய மாட்டார்கள்.
ஏனென்றால் அவனிடம் பட்ட
துன்பத்திற்கு அவனும் கஷ்டப்பட
வேண்டும் என்றே நினைப்பார்கள்.



வம்பர்களுக்கு அவர்களின் மீதே ஒரு காழ்ப்புணர்ச்சி உண்டு என்பது உண்மை தான். அவர்கள் தன்னை ஒரு ஹீரோவாக பார்க்க வேண்டும் என்று நினைப்பார்கள். ஆனால் உண்மையில் அவர்களோடு யாரும் நண்பனாய் இருக்க விரும்புவதில்லை.



சிலருக்கு அவர்களை பார்த்தால் பாவமாகவே தோன்றும்.

வம்பனாய் ஆவது ஏன்?

சிலருக்கு இயற்கையாகவே அது போன்ற இயல்பு இருந்தாலும்



பெற்றோர்கள் வளர்ப்பும் காரணமே. எதையும் அழுதே சாதித்து விடலாம் என்று கண்டு-கொள்ளும் குழந்தைகள், எப்போதும் தன் மீதே கவனம் இருக்க வேண்டும் என்று நினைக்கும் குழந்தைகள் இவர்களே பள்ளிகளில் தங்கள் மீது கவனம் ஈர்ப்பதற்காக வம்பர்களாய் மாறுகிறார்கள்.

சில நேரங்களில் வேறு விதமாகவும்
இந்த வம்பர்கள் உருவாகிறார்கள்.



வீட்டில் தனது சகோதரனோ, சகோதரியோ, பெற்றோர்களோ
இவர்களிடம் வன்முறையாக நடந்திருந்தால் இவர்களும்
அடுத்தவர்களிடம் வம்பு செய்பவர்களாகவே மாறுவார்கள்.

வம்பர்கள் ஒருவிதத்தில் பலவீனமானவர்களே !



யாரும் அவர்களை எதிர்க்க இல்லையெனில்
அப்போது அவர்கள் அதிகாரமுடையவர்களாக மாறுகிறார்கள் .
தன்னை தானே அவர்கள் உயர்ந்தவர்களாக
எண்ணி கொள்கிறார்கள். அவர்கள் சொல்வதை மற்றவர்கள்
செய்ய வேண்டும் என்று எண்ணுகிறார்கள்.
அப்படி நடந்து கொண்டால் தன்னை தலைவனாக ஏற்று
கொள்வார்கள் என்று நினைக்கிறார்கள்.
அவர்களை சுற்றி "ஆமா சாமி" போடுவர்களையே தன்னை
சுற்றி வைத்து கொள்வார்கள். இது போல் உருவாகும்
தலைவர்கள் நாட்டிற்கே பெரும் ஆபத்து உண்டாக்குவார்கள்
மக்களை ஏமாற்றுவார்கள், நாட்டை போருக்கு இட்டு
செல்வார்கள். எப்போதும் இவர்களை இன்னொரு வம்பர்களே
தோற்க்கடிப்பார்கள்.

உண்மையான அன்பும்
மரியாதையும் நல்ல
தலைவர்களுக்கே கிடைக்கும்
நல்ல தலைவர்கள் தன் பலவீனத்தை
உணர்ந்தவர்களாகவும்
மற்றவர்களை மதிப்பவர்களாகவும்
இருப்பார்கள்.
அடுத்தவர்களிடம் பகைமை
வளர்க்க மாட்டார்கள்.
வம்பர்களை மட்டுமே அவர்கள்
எதிர்ப்பார்கள்.
வம்பர்களுக்கு அவர்கள் அடி பணிய
மாட்டார்கள் .
எதிர்ப்புகளை தைரியமாக எதிர்
கொள்வார்கள் .

நாம் எல்லோருமே நமக்கு வேண்டியதை

அடைவதற்கு சில

நேரங்களில் மற்றவர்களிடம்

சுயநலத்தோடு தான் நடந்து கொள்கிறோம்.

அப்படி பார்க்கும் போது நாமும் வம்பர்களே.



வம்பு செய்வது என்பது சுய நலவாதியாக இருப்பதே .

இச்சமூகத்தில் நாமும் வம்பனாக இருந்திருக்கலாம் அல்லது நம்மை யாராவது வம்பிழுத்துருக்கலாம்...

இப்புத்தகம் நம்மை நாம் புரிந்து கொள்வதற்கே.

வம்பர்கள் ஏன் உருவாகிறார்கள், எதற்கு உருவாகிறார்கள், எப்படி உருவாக்கப்படுகிறார்கள் என்பதை இப்புத்தகம் தெள்ள தெளிவாக கூறுகிறது.

